## யாழ்நாட்டுச் சருக்கம்

(கலிநிலைத் துறை)

183. எங்கள் நாதனல் இமகிரி மங்கைதன் நாதன்
கங்கை நாதனாங் கருதிடு விண்ணவர் நாதன்
பங்க மில்வட் டூரவர் பரவிடும் நாதன்
துங்க மார்பதங் தொழுதுயாழ் நாட்டணி சொல்வாம்

184 இற்றை நாளினில் இந்துமாக் கடலென இயம்புங்
குற்ற மற்றதொன் னிலத்தினில் கூறிடின் முந்தை
உற்று நின்றதால் குமரியாம் உயர்நிலப் பரப்பும்
மற்று மாங்கதில் தமிழின மாந்தரே வாழ்ந்தார் 2

185. ஆய சீர்த்திகொள் குமரிநா டாங்கதும் பண்டை
ஏய தோர்கடற் கோளினுள் மூழ்கியே ஏக
மேய ஈழமும் வேறுள தீவகம் பலவும்
மாய்த லின்றிறே நின்றன மாநிலப் பரப்பில் 3

186. பன்னும் ஈழமாம் நாட்டினுள் யாழகம் பகரின்
துன்னு மேற்கொடு வடக்குடன் கதிரெழு குணக்கும்
மன்னு மாக்கடல் எல்லையாய் வகுத்திட ஓங்கும்
பின்னுந் தெற்கில் வன்னிநா டுயர்வுடன் பிறங்கும் 4

187. சீர்கொள் நல்வள யாழகத் திருவெனுஞ் செல்வி
ஏர்கொள் தண்டமிழ் சிவநெறி எனுமிரு விழிகள்
பேர்கொள் தண்ணளி பெருக்கிட இருந்தர சோச்சித்
தார்கொள் மன்னரும் மக்களும் தழைத்திட நின்றாள்

188. நீடு வான்புகழ் நிலவுநல் யாழக நாட்டில்
ஈடில்தொன்மைய தமிழரோடொருகொடி வந்தோர்
நாடு சீர்மலி நாகரெங் குழுவினர் தாமுங்
கூடிவாழ்ந்தனர் தண்டமிழ்ப் புலமையுங் கொண்டே 6

189. நற்றிறத்துயர் நாகராங் கொடியினர் இவரும்
பற்றலார்புரம் செற்றிடு பரமனின்நடனம்
பெற்ற தில்லையுட் கண்டிடு பணிக்கிறை பதஞ்சலி
போற்றி ருப்பதம் போற்றிவாழ் புண்ணியம் உள்ளார்

190. அன்று தண்டமிழ்ச் சாத்தனார் அன்பொடும் போற்ற
நின்ற வான்பத பங்கயம் நிலவிடும் ஓங்கல்
துன்று ரத்தின தீவகத் தயலினில் தோன்றும்
என்று சொற்றிடும் நாகநன் நாடுமற் றிதுவால் 8

191. வீங்கு கற்குவை இயற்கையின் விளைவினாற் சிதைந்தே
ஓங்கும் ஓர்புறம் பெருமணல் மிக்கிடு திறத்தால்
பாங்கு ணர்ந்தவர் மணற்றியாம் பதியெனப் பகரத்
தாங்கு பேரதும் தரித்ததெம் தாய்த்திரு நாடு 9

(வேறு அறுசீர் விருத்தம்)

192. கோணா கணையில் துயில்வானும்
குளிர்தா மரையின் மேலானும்
காணார் கழலே தொழுதேத்தும்
கடவுட் பெருமான் விசுவேசன்
தாணா ளுந்தந் தலையேத்தும்
தக்கோர் உறையுஞ் சால்புமலி
வீணா கான புரப்பதியாய்
விளம்பும் பெருமைத் திருநாடு 10

193. பண்டைக் கதிரை மலையுடனே
பரவுஞ் சிங்கை நல்லையிவை
கொண்டே வளர்த்துக் கோநகராய்க்
கூடார் தாமும் புகழ்நாடு
தண்டாக் கீர்த்தித் தமிழ்மன்னர்
தளிக ளெடுத்தே குளந்தொட்டு
மண்டும் அன்பின் வளர்த்தெடுத்த
மாண்பு கொண்ட யாழ்நாடு 11

194. வளரும் கலாப மயின்மீது
வள்ளி தெய்வ யானையுடன்
உளமுந் நெகிழ வருகந்தன்
உவக்கும் மாவைத் தளிதந்த
வளவர் குமரி மணவாளன்
வான்றோய் புகழுக் கிரசிங்கன்
களமே பலகாண் மாமன்னன்
காவல் பூண்ட திருநாடு 12

195. மட்டார் தொங்கல் விசயசிங்கை
வேந்தே முதலாம் மாமன்னர்
பட்டப்பெயராய்ப்பரராசன்
பயிலும் சீர்த்திச் செகராசன்
இட்டு முன்னாள் முடிதாங்கி
இடபக் கொடியை ஏற்றினராய்
எட்டுத் திசையும் இசைநீட
இன்போடாண்ட தாய்நாடு 13

196. மானங் காக்கும் மன்னருடன்
மருவுவி யூகம் பலநடத்திக்
கானம் யாவும் கடந்தேகிக்
கடும்போர் செய்தோர் வாழ்நாடு
ஈனம் உறவே மாற்றலர்கள்
எவரும் ஆற்றார் புறங்கொடுப்ப
வானம் முட்டும் புகழ்படைத்தோர்
வாழ்ந்து நின்ற திருநாடு 14

197. வேற்று நாட்டுப்பறங்கியர்கள்
மேவிவந்து சாடுநாள்
மாற்றார் வலிக்கு மாயாமல்
மானங் காத்த மாமன்னன்
சாற்றும் சங்கி லிக்குமரன்
தானும் ஆண்ட தனிநாடு
பேசாற்றும் சித்த மருத்துவநூல்
புனைந்து வளர்த்த தாய்நாடு 15

198. கண்டின் சுவைசேர் தண்டமிழைக்,
கவினார் சைவத் திருநெறியை
பண்டை நாளில் திசைமுற்றும்
பரப்பி இமயத் துச்சிதனில்
மண்டும் வேங்கைக் கொடிபறக்க
வானம் அணவும் புகழ்கூட்டிக்
கொண்ட வளவர் வாழ்ந்திடவே
குலவி நின்ற நந்நாடு 16

199. வாடாச் சீர்த்தி மதுரையிலே
மன்னுந் தமிழைக் காத்திடவே
பீடார் சங்கம் வைத்ததனிப்
பெருமைக் குரிமை பூண்டவர்கள்
கூடார் தம்மைப் புறங்கண்டே
கோணா மலையில் இலச்சினைதான்
நீடப் பொறித்த வழுதியர்கள்
நேயம் கொண்ட யாழ்நாடு 17

200. வேண்டும் உணவுப் பண்டங்கள்
விளைவித் திங்கு வளங்கூட்டித்
தூண்டும் தமிழை வளர்த்தற்காய்
தொன்னாள் எடுத்த சங்கந்தான்
மாண்டே போகா வகையோம்பும்
மன்னன் சிங்கைப் பராசசன்
ஆண்டே காத்த திருநாடாம்
அகிலம் போற்றும் யாழ்நாடு 18

201. முந்தைச் சிங்கை பராசசன்
மொழியும் நல்லைத் திருநகரில்
எந்தை கைலை இறையினுக்கும்
ஏத்து வீர காளிக்கும்
விந்தைச் சட்ட நாதருக்கும்
வெயிலை உகந்த பிள்ளைக்கும்
நந்தா விளக்கின் ஆலயங்கள்
நாட்டி நகரைப் புதுப்பித்தான் 19

202. அன்னான் றானும் பாரதத்தில்
அமைந்த தூய யமுனைநதி
நன்னீர் அதனை வருவித்து
நாளுங் கோளும் நனி தூக்கி
தன்னாடுயர நல்லைதொடு
தடத்தின் உள்ளே நிறைவித்து
இன்நாட் புகழும் யமுனாரி
ஈங்கணியற்றி எழில்செய்தான் 20

203. நண்ணுங் கூழங் கைப்புலவன்
நல்லைச் சின்னத் தம்பிமுதல்
எண்ணில் கவிதை பலசெய்த
எழிலார் புலவன் சிவசம்பன்
தண்ணென் கவிதை பலதந்த
தங்கத் தாத்தா சுந்தரர்போல்
எண்ணில் புலவோர் கவித்தீபம்
ஏற்றி வைத்த யாழ்நாடு 21

(வேறு)

204. அலரவன் உடல்படைப்பான்
அறிஞர்கள் கவிபடைப்பார்
மலரினோர் வானை வேண்டார்
வந்துமே வாழ்வ ரீங்கு
நிலமகள் பொறுமை காப்பாள்
நிறையினோர் சகித்தல் காப்பார்
புலவர்கள் அமுத முண்பார்
புலவர்கள் அமுத முண்பார் 22

205. மாடம் மலியும் மதுரைதனில்
மன்னும் சங்கத் தமிழ்ப்புலவன்
ஈடில் பூதன் தேவன்பின்
ஏய நிலையை மாற்றிடவே
நீடுங் கவிஞர் சுவைதேரும்
நீர்மை இரகு வமிசம்செய்
பீடார் அரச கேசரியாம்
பேரார் புலவன் வாழ்நாடு 32

(தரவுக் கொச்சகம்)

206. ஓங்குதமிழ் அளக்கரினை உவந்தள்ளி மடுத்துண்டு
தாங்குதமிழ் மாணியரின் தடமனதில்நிறைவித்தோன்
ஈங்கினிய பலபாடல் இயற்றியெமக் களித்திட்டோன்
தேங்குபுகழ்ச் சேனாதி ராயனுந்தான் திகழ்நாடு 24

207. எல்லையிலாத் தமிழமிர்தை
இசையுடனே பருகிநின்று
வல்லமையாற் கவிவாணன்
வரகவியென் றிசைக்கநின்றோன்
பல்வளனும் நிறைந்துயரும்
பதியாய சுன்னையினான்
நல்லமுத்துக் குமாரகவி
நாயகன்றான் வாழ்நாடு 25

208. திருவாரும் நல்லைநகர்க்
குணகிரியில் திகழ்ந்தெழுந்தே
ஒருவாத கலைஞானக்
கதிரவனாய் இருளகற்றி
வருவாய்மைச் சிவநெறியைத்
தமிழ்மொழியை வளர்த்தவருட்
குருவாய ஆறுமுக நாவலரும்
குலவுநாடு 26

209. ஆறுமுகங்கொள் ளாமல் அருட்படைகள் தாங்காமல்
வேறுபடு பரசமய விதமகற்றிச் சிவம்பேணி
நீறுடனாய்க் கண்டிகையும் நிலவிடவே தமிழ்புரந்த
ஆறுமுக நாவலர்தம் அடிக்கமலம் வழுத்துவமே 27

210. மிடைதருவெம் பவக்கடலில்
வீழ்ந்தோர்குப் பெரும்புணையாய்க்
கடைவிழியால் அருள்நோக்கம்
காட்டிமகிழ் பெரும்பித்தன்
இடைதனிலே கருந்துணியே
என்றுமணி அருட்சித்தன்
கடைச்சாமி அருளாடல்
காலமெலாம் புரிநாடு 28

211 நல்லவைருகந்தனதுதேர்ப்படியைநயந்துகொண்டோன்
அல்லலுறு மீனவர்க்கும் உததியிடைஅருள்புரிந்தோன்
வல்லகுரு கடைச்சாமி வாய்மொழியை உணர்ந்த
மேலோன்
செல்லப்ப சுவாமியெனுஞ் சித்தனுந்தான் வந்தநாடு

212. நண்புபயில் யாழ்ப்பாணத் தீசனென நவிலவந்தே
மண்டுபுகழ்க் கடைச்சாமி மாணவகனெனவாகி
கொண்டவுடல் பொருளாவிகுருதாளில்வைத்ததூயன்
திண்டிறல்சேர்குழந்தை வேற்சாமிசித்தர்திகழ்ந்தநாடு

213. சீரேறு செல்லப்ப சுவாமியவர் மாணியாகிப்
பேரேறு நால்வாய்மைபெற்றுயர்ந்து நின்றயோகி
நேரெவரும்இல்லையென அற்புதங்கள்நிகழ்த்துமையன்
ஏரேறு சிவயோகச் சித்தனுந்தான் இருந்தநாடு 31

214. வேதமொடும் ஆகமங்கள் விளம்புபொருள்
மெய்மை தேர்ந்தோன்
தீதகலாச் சிவயோக நெறிதனிலே
திகழ்ந்த மேலோன்
சீதமலி வட்டூரில் சிவதளியை
நிறுவிவைத்தோன்
மாதவத்தோன் அப்பாவுங்வந்துதித்த
திருநாடு 32

(வேறு)

215. இன்ன பான்மைத் தொன்நாட்டின்
எழிலார் கோல மதுகொண்டோ
மன்னு நன்னீர் வளமுடனாய் மரீஇய
பான்மை தான்கொண்டோ
பன்னுந் திறல்சேர் யாழ்ப்பாணர்
பண்டு வதிந்த பரிசோகொல்
என்னோ இசைசேர் யாழ்ப்பாணம்
என்னும் பெயரும் எய்திற்றால் 33

216. பாரினைத் தமிழர் முன்னாள்
பகுத்தனர் திணையந் தாக
ஏருடை முல்லை யோடும்
இயைந்திடு குறிஞ்சி பின்னும்
நீரிலா வெம்பைப் பாலை
மருதமே நெய்த லாதிப்
பேரினால் அழைத்தார் அம்மா
பிறங்கிடும் இயற்றை நோக்கி 34

217. செந்தமிழ் யாழ்நாட் டின்கண்
தெரித்திடின் முல்லை உண்டே
வந்துயர் குறிஞ்சி யோடே
வரண்ட வெம் பாலை காணும்
நந்துசீர் மருதத் தோடும்
நலமுயர் நெய்தன் மன்னும்
இந்திர வுலக மென்றே
இசைப்பாராற் புலவோரீதை 35

218. மலர்மிசை வேதன் பண்டு
மகிழ்ந்துமே இயற்கை யென்னக்
குலவுமஞ் சனங்கைக் கொண்டு
கோதிலா வகைகு ழைத்துப்
பலர்புகழ் காட்சித் தாகப்
படைத்திடு சித்ர கூடம்
தலமிசை யாழ்நா டென்றே
சாற்றலாம் சரதந்தானே 36

219. நீலவான் முட்டி நிற்கும்
நெடுமலைக் குலமின் றேனும்
கோலமார் நகுலக் குன்றம்
குறையினை அகற்றி நிற்கும்
பாலெலாம் பரந்தே யோடிப்
பாயுமா றில்லை யேனும்
சீலமார் முனிவன் தோய்ந்த
திருமலி அருவி யுண்டே 37

220 மாடெலாம் புதர்கள் மேவ
மணன்மலி குன்றம் நின்றும்
நீடுநற் புதுநீர் கொண்டு
நின்றிழி அருவி விஞ்சும்
கேடிலாப் புகழ் படைத்த
கிரிமா மலையிற் கேணி
ஆடலாங் குற்றா லந்தான்
அதனினும் மிக்க தன்றால் 38

221 பாதல மங்கை பன்னாட்
பாரினின் எழிலைக் காண
தீதிலாப் புழையொன் றாக்கிச்
செய்திடு பான்மை என்ன
ஈதலால் வற்றா ஊற்றும்
இல்லையே யென்றிசைப்பப்
போதுமால் ஆழந் தேரா
நிலாவரைப் பொய்கை யம்மா 39

222 நீடுசெந் தமிழி னோடு
நிகரிலாச் சைவந் தன்னைப்
பீடுற ஓம்பிக் காத்த
பெருமைசால் யாழ்நாட் டின்கண்
காடுறை உலக மென்றே
கற்றவர் கழற நின்ற
பாடுறு முல்லைச் செய்தி
பகருவம் சிறிது தானே 90

(கலிவிருத்தம்)

223 கூடு காடுறை முல்லையின் மாந்தரார்
மேடு யாவையும் வெட்டி விருப்புடன்
நாடு சாமை வரகவை நாற்றியே
நீடும் இன்பொடு நின்று நீர் பாய்ச்சுவார் 41

224 கண்ணும் ஆவியு மாயவை காத்துமே
எண்ணு வான்களை கூட்டியே ஓம்புவார்
துண்ணெ ணாவவை தோன்றிக் கலித்துமே
நண்ணு நற்கதிர் நல்கிவி ளங்குமே 42

225 பெற்ற தாயவள் பேதுறக் கன்னியை
மற்றை யோர்வெளவு மாறென மாண்கதிர்
பற்றிச் சென்றிடு பட்சிசா லங்களை
உற்று நின்றுமே மாதரார் ஓச்சுவார் 43

226 சொல்லு நற்கதிர் கொய்து சுமந்துமே
இல்லி னுட்கொடு சென்று குவித்துமே
எல்ல வர்க்குமாய்த் தந்தினி தாற்றியே
அல்லல் தீர்ந்தங் கன்பேோடு மேவுவார் 44

227 வந்த இல்லினுள் வைகிடும் ஆவொடு
முந்து மேழகம் மானொடு மேதியும்
தந்தி வற்றினை யோம்பிநற் செல்வமாய்
நந்து மன்பொடு நாளும் புரப்பரே 45

228 பார்வை யாகிய மான்பிணை கண்ணினால்
ஏர்கொள் கன்னியர் எந்தமை வென்றனர்
யார்க்கு ரைப்பது யாதினிச் செய்வதென்
றோர்வ போற்புறம் போகியொ துங்குமால் 46

229 கல்லெ னத்திணி தோளிளங் காளையர்
சொல்ல நின்றகொல் லேற்றினை வென்றுமே
பல்ல வர்களும் பார்த்திடத் தாம்விழை
செல்வி யர்களைக் கைப்பிடித் தேகுவார் 47

230 ஆவி னந்தனை அன்பொடு கூட்டியே
மேவு புன்நிலம் மேய விடுத்துமே
ஓவு கொன்றை நெடும்பழங் கோதியே
ஏவ ரும்மகிழ் இன்னிசை கூட்டுவர் 48

231. காவ கந்தனில் வேய்ங்குழ லோசையும்
கோவ லர்களின் கூவிளிச் சும்மையும்
ஆவினங்கள் இயற்றிடு சத்தமும்
பாவை மார்களின் பாடலும் ஓங்குமால் 49

232. பாற்ப யன்கொடு பாவையர் தாம்விலை
சாற்றி ஈட்டிய தாந்தனஞ் சேர்த்துமே
மாற்றி வேறுள பண்டமும் வாங்கியே
போற்று வாரிலம் பொன்மகள் வைகவே 50

(அறுசீர் விருத்தம்)

233. காரெனும் பருவந் தானுங்
களிப்புற வந்து போந்தால்
நீரினைக் குடித்து மேகம்
நிமிர்ந்துமே முழங்கி நிற்கும்
பாரெலாங் குளிரும் வண்ணம்
பருவமா மழையும் பெய்யும்
ஏருறு வெள்ளந் தானும்
எங்கணும் பரந்து நிற்கும் 51

234. ஓடைகள் குளங்க ளெல்லாம்
உற்றுநீர் தேங்கி நிற்கும்
நீடியே வெள்ளம் ஆறாய்
நிகழ்த்திடப் பரந்தே போகும்
கூடியே மீனினங்கள் குதிகொடு
பாய்ந்து செல்லும்
வாடிடு புள்ளி னங்கள்
வந்துமே வவ்வி யேகும் 52

235. மண்ணினைக் கலக்கி வாரி
வளர்கொடி அள்ளிச் செல்லும்
தண்மலர்க் குவையைத் தாங்கித்
தழங்குநீர் பரந்து போகும்
உண்ணிகள் உவகை யாலே
உறுசிறார் ஒருங்கு கூடிப்
பண்ணிய ஓடம் விட்டுப்
பார்த்துமே மகிழ்ந்து நிற்பார் 53

236. கலங்கியே ஓடும் நீரைக்
கண்டிடும் இளைஞர் ஆனோர்
நலங்கொளும் யாறாம் என்றே
நண்ணுவர் ஆடற் காக
வலங்கொழுந் தாயர் தாமும்
வந்தவர் கைப்பிடித்தே
இலங்கிடு வெள்ள மீது
என்றுமே ஈர்த்துப் போவார் 54

[வேறு கலிவிருத்தம்]

237. கடம்பல கடந்துமே கண்ட தேன்றனைத்
திடம்பட எடுத்துமே வந்து தம்மனை
மடம்படு சிறார்க்குமே மடுப்பத் தந்துபின்
இடம்பல கொடுபகர்ந் திட்டு வார்தனம் 55

238. இறும்பிடைப் பிடித்துவந் திட்ட கோழியும்
குறும்பிடை மானொடு முயலுங் காணலாம்
திறம்பயில் இருக்கை ட்டீஞ்சொ லஞ்சிறார்
வறுங்களம் கூடியே குரவை யாடுவார் 56

239. மருவுறு தடந்தொறும் வளரும் ஆம்பலை
உருவுறு இளைஞரும் உற்று நோக்குவார்
திருவுறு காதலார் அதரந் தானெனாப்
பெருகுறு மன்பொடும் பெருமை எய்துவார் 57

240. பயில்தரும் இல்லெலாம் பாற்கு டங்களே
அயிலுவர் பாற்பதம் அஞ்சி றார்களே
வெயில்படு சாரெலாம் தினையின் குன்றமே
துயில்தருங் குரம்பையுட் கோழி யீட்டமே 58

241. எந்திரஞ் சிலைத்திடும் இன்று கானிடை
வந்துயர் தருவினை வகையில் வீழ்த்துவார்
தந்திடு சிறுசிறு துண்டஞ் செய்குவார்
முந்துபல் பொருள்களை முனைந்து மாக்குவார் 59

242. அரிமலர்ப் பதங்களை அன்பி னேத்துவார்
பரிவொடு முருகவேள் சத்தி முன்னவன்
துரியமெய்க் கடவுளாஞ் சோதி வானவன்
உரியபொற் றிருவடி உவந்து போற்றுவார் 60

(வஞ்சி விருத்தம்)

243. கலைமதி புனைதரு காரண
நிலைதரு சிவவிசு வேசனே
மலைவிலர் அகமதில் மன்னுவாய்
தலைமிசை திருவடி சேர்த்துதும் 61

244. நவமலி தளியுறை நம்பனே
தவமலி தகையத யாபர
பவவினை தடிவிசு வேசனே
சிவசிவ தாண்மலர் சூட்டுதும் 62

245. அரவினை அணிகல னாக்கினாய்
கரவினர் அறிவரு காட்சியாய்
பரவிட வினையவை பாற்றுவாய்
அரகர பதமலர் போற்றுதும் 63

246. மறிமழு பயில்தரு கையனே
நெறிவளர் புகழ்விசு வேசனே
அறிதர எமதிடர் தீர்க்குவாய்
வெறிகமழ் மலரடி வேண்டுதும் 64

247. எனமன மகிழ்வொடும் ஏத்துவார்
கனதன நலமவை காண்குவார்
இனநல மினிதென ஓம்புவார்
வனமிசை வதிதரு மாந்தரே 65

[கலித்துறை]

248. நல்ல வளத்தின் நின்றுயர் செம்மை நலஞ்சேருஞ்
செல்வ மிகுத்தமுல்லையின் மாண்பு சிலசொன்னேம்
மல்கு மியற்கை மானெழில் விஞ்சு குறிஞ்சிச்சீர்
சில்ல வுரைப்பம் இன்னினி மேலுந் தெரிதந்தே 69

(அறுசீர் விருத்தம்)

249. பண்டைய தமிழர் தாமும்
பகுத்தனர் இயற்கை தன்னைக்
கண்டனர் முதலே மேலும்
கருவுடன் உரிமூன் றென்னா
விண்டசீர் முதல்பி ரிந்தே
நிலனொடு காலங் கொள்ளும்
மண்டிடு கூதிர் யாமம்
முன்பனி குறிஞ்சிக் குண்டே 67

250. மருவிடு யாழின் மங்கை
மலைநிலம் விழையா ளேனும்
திருவுறு பொருப்பிற் கேய்ந்த
தேர்வரும் அளவு தோற்றம்
வருபொருள் துளங்கா வண்மை
வறப்பினும் வளஞ்சேர் மாண்பு
கருதிடு சான்றோர் மாட்டுங்
கண்டுமே உவந்தி ருந்தாள் 68

251. வரையினுக் கெழிலே கூட்டி
வளர்ந்திடு தருக்க ளாக
உரைதரும் அசோகு காந்தள்
உயர்ந்திடு தேக்கு முண்டே
விரைமலி சந்திங் கில்லை
வேங்கையும் பிறவும் மேவும்
நிரைநிரை அவையுள் நின்றே
நல்கிடும் பயன்க டாமே 69

252. மரகதப் போர்வை போர்த்தி
மணிக்கழுத் தாரம் வீக்கி
பரவுமெல் இசைமி ழற்றும்
பண்புசேர் கிள்ளை யாரும்
கரவினை அறிய கில்லார்
காதலுங் களிப்பும் மேவி
மரபுடன் விரைந்தே போகி
மாடெலாம் இசையே செய்வார் 70

253. புலியொடு கரடி யாணை
போலவாம் விலங்கு சேர்ந்தே
நலிவிலா வகைப யின்று
நண்ணியே திரியுமாலோ
கலைமலி புலவோர்க் கெல்லாம்
கவினுறு காட்சித் தந்தால்
பலபல பேசி யென்னே
பண்ணவர் புகழ்நா டதே 71

254. முகிலினின் முழக்கைக் கேட்டு
முற்றிடு மகிழ்ச்சி யாலே
அகமகிழ் விஞ்ச மேவி
அணிமயிற் குழாங்க ளுந்தான்
தகவுறு கலாபம் தூக்கித்
தாந்திமி சதியுங் கூட்டிப்
பகலிலலா மாடுங் காட்சி
பார்த்திடின் இனிக்கு மாலோ 72

255. தினையினை வித்தி மாந்தர்
தேனினைத் திரிந்து சேர்ப்பார்
நினைவுடன் கதிர ரிந்து
நிறைந்தசீர்க் குடிலசை சேர்ப்பார்
மனையிடைக் காய வைத்து
மாண்புடன் பதமுஞ் சேர்ப்பார்
வினைவலார் தம்மை யேவி
விற்றுமே நிதியஞ் சேர்ப்பார் 73

256. நிதியமும் அடுக்கல் போலாய்
நிமிர்ந்துமே கதித்தி லங்கும்
வதிதரு வாட்க ணாரும்
மைந்தரும் வளத்தின் மூழ்கி
பதியெழு வறியாப் பண்பிற்
பரிசன ரோடுங் கூடி
விதிமுறை வழுவா வண்ணம்
வேண்டிடு தொழில்கள் செய்வார் 74

257, குறிஞ்சியின் ஒழுக்க மாகக்
கூறினர் திறவோர் முன்பு
நெறிதரு புணர்ச்சி யோடு
நீடிடு நிமித்தம் தன்னை
அறிதரில் இந்நாட் காதல்
அரும்பியே முகிழ்த்து முற்றிப்
பிறிவிலா மணமே கண்டு
பேணியே இன்பம் துய்ப்பார் 75

258. கூதிரும் அடுத்து விட்டாற்
கொடுங்குளிர் மேவி நிற்கும்
போதரும் வாடை மேலும்
புண்ணினுள் நுழைந்த வேல்போல்
ஏதமில் சிறார்க டாமும்
ஏங்கியே விதிர்வி திர்ப்பார்
மாதரார் கற்பின் மிக்கார்
வாடியே நைந்து சோர்வார் 76

259. கறவைகள் மேய்ச்ச லுந்தான்
கண்டிடா ஒதுங்கிச் சோரும்
விறலுறு மந்திக் கூட்டம்
வெது பியே நின்று தாழும்
பறவைகள் கொம்பர்மீதே
படிந்திடா இரிந்து போகும்
அறநெறி நீத்தா ரென்ன
அவலமே உறுவர் மாந்தர் 77

260. செந்தமிழ் முருகன் செவ்வேள்
சினவிடை யூர்தி மைந்தன்
முந்துசீர்க் குடமு னிக்கு
மொழிந்தவன் இலக்க ணந்தான்
கந்தவேள் சேயோன் போந்த
கார்த்திகை மகளிர் பாலன்
எந்தையார் புலவோர்க் கென்றும்
இன்பமே நல்கும் பெம்மான் 78

261. மன்னுமா மயிலி லூரும்
மணியெனுங்குமர வேட்குத்
துன்னுபல் லால யங்கள்
சொல்லலாம் பலவிங் குண்டால்
அஞ்னவை தம்முண் மாந்தர்
அணியணியாகக் கூடிப்
பண்ணுசீர் விழாக்கள் கண்டே
பயனனி துய்த்து வாழ்வார் 79

262. கூறுசீர்க் குறிஞ்சி மாந்தர்
குறையெதும் புகுந்தக் காலை
வீறுசேர் புகையெ டுத்தே
விழைவொடு பொங்க லிட்டு
ஏறுசீர் மலர்க டூவி இரும்புகழ்த்
துதிகள் பாடிப்
பேறுறு வெறியாட் டாடிப்
பெருகுநல் இன்பங் காண்பார் 80

— வேறு —

263 பரவுபுகழ்ப் பனுவலறு நாவலர்தாம்
பாரின்கண் பகர்ந்து வைத்த
மரபுமலி நடுவுநிலைத் திணையென்னும்
நாமங்கொள் பாலை தானும்
வரமலியும் யாழ்நாட்டில் வரட்சிவிஞ்சு
பாங்கரினும் இல்லை யேனும்
மரமுதலாங் கருப்பொருளும் உரிப்
பொருளும் மதிக்குங்கால் உண்டுதானே 81

264. வேனிலொடு நண்பகலும் பின்பனியும்
பாலையதன் பொழுதே பாரீர்
தானிலவு மாலமெனப் பனியொழுகி
வீழ்ந்திட்டே தவசெறு ய்யும்

மானமிலா வன்னெஞ்சர் உளமென்ன
வெம்மைசிந்தி வெயிலும் காயும்
ஈனமிக வெய்தினராய் ஏவருமே
யீங்கிவற்றால் இடரு ழப்பர் 82

265. முல்லையொடு குறிஞ்சியுந்தான்முறைமையுள
திரிந்திட்டே இயல்ப ழிந்து
தொல்லைமிகு துயருறுத்துச் சுரமாகித்
துன்புதந்து நிற்கு மென்றார்
எல்லவரும் ஏத்தவரு யாழ்நாட்டில்
இந்நிகழ்வே இல்லை யில்லை
வல்லமைசேர் இயற்கையன்னை
அருட்கொடையை என்றென்றும்வ ழுத்துவோமே 83

266. விண்ணோங்கி நிவந்துயர்ந்த கொம்பரையே
நாற்றிசையும் விரித்து நீட்டி
தண்ணார்ந்த பயனல்கு தருக்குலங்கள்
தழைகரிந்து நிலைமை வீய
மண்ணோர்கள் நிழல்காணார் வறுமையுற்று
பதைபதைத்தே அரற்றி நிற்க
எண்ணானாய் வெய்யோனும் தீகொளுவி
எவற்றையுமே தீய்த்து நிற்பான் 84

267. வளர்ந்தோங்கும் இருப்பையொடு யாலைமுதற்
றருக்குலங்கள் வளமே பேணும்
தழங்குபுகழ்ப் புறவினொடு பருந்தெருவை
தாமுலவும் வானின் மீதே
குளங்கேணி கழிகளெலாம் நீர்வரண்டு
வறிதாகிக் குலவி நிற்கும்
விளங்குகள்ளி கரிந்துபோய் வெயில்வாட்டத்
தணல்சிந்தி வெந்து போகும் 85

268. உன்னுநெருப் பதனையிங்கு தகடதாக்கி
உஞற்றினரோ என்ன வஞ்ச
துன்னுதணல் சுடுமா போல்சுட்டிடுங்காண்
சிலகாலம் நிலனுந் தானே
அன்னகொடு வெப்பத்திற் காற்றாதே
பறந்தொதுங்கும் புறவி னீட்டம்
பின்னதனை உணவாக்கும் எண்ணமுடன்
விரைந்திடுமால் பருந்தினங்கள் 86

269, சுரத்தினுக்கே உரிப்பொருளாய்ச் சொற்றனரே
புலவோர்கள் பிரிவு தன்னை
உரத்தினுயர் ஆடவர்கள் ஏதுக்கள்
பலவைத்தே நீங்கிச் செல்வார்
மருத்தனைய மொழிபயிலும் மடவாரைத்
தோழியர்தாம் தேற்றி வைப்பார்
விருப்பிலராய் பிரிந்தோர்கள் வினை முடித்து
பொருள்கூட்டி மீள்வரம்மா 87

270. வகுப்பவரு பாலைநில வாணருந்தான்
வணங்குவரே வீரஞ் சான்று
மிகுக்குமுயர் கன்னியென விளங்குதுர்க்கை
அன்னைதனை விருப்பினோடே
உருத்தெழுந்த அன்பாலே பாட்டிசைத்தே
உடுக்கொலிப்பார் உவந்து கூடித்
தொகுத்துரைக்கும் இன்பமெலாம் தந்தருளாய்
தோகையென உவந்து தானே 88

வேறு

271. தீம்புனல் உலக மாகச்
செப்பிடத் திகழ்ந்து மன்னி
ஆம்பயன் அனைத்தும் மிக்கே
ஆருயிர் இனங்கள் துய்க்கும்

தீம்பத முதல ஏய்ந்து
செந்நெலும் பிறவுங் கொண்டே
ஓம்புநர் மருத மாண்பிங்
கொருசில உரைத்து மன்றே 89

272. மருதமாய் நவில வந்த
மாண்புசால் திணையுந் தானே
இரும்புலர் காலை யோடும்
ஏய்ந்திடு பருவ மாறாம்
பொருவுசீர்ப் பொழுதி னோடு
பொருந்துபல் கருவும் வாய்ந்து
வருமுரி ஊடலோடு
நிமித்தமும் மிகுப்ப நிற்கும் 90

(கலிநிலைத்துறை)

273. ஏரி அளக்கர் உற்றுறு
முந்நீர் கொடுபோகி
வாரி வழங்க வந்தெழு
மேகம் வலமாகிச்
சேரி அழுங்கச் சென்றுமே
மின்னி நெடிதாக
மாரி பொழிந்தே தந்திடும்
மாந்தர் மகிழ்வெய்த 91

(வேறு)

274. மாரியில் வானந் தானும்
வலமெழீஇப் பொழிந்து கொட்ட
ஏரிகள் மடுக்கள் யாண்டும்
இருப்புனல் வழிந்து மேவி
நீரெலாம் ஒருங்கே யாறாய்
நிமிர்ந்துமே பெருகி யோடி
சீரியல் வழுக்கை யென்னச்
சென்றுமே கடல்க லக்கும் 92

275' திருமலி வழுக்கை யாறும்
தீம்புனல் நீத்தங் கொண்டு
தருமலி மலர்கள் தாங்கி
மரக்கிளை உருட்டித் தள்ளி
அருகுள கழனிக் கெல்லாம்
அருத்தியின் நீரும் நல்கிப்
பெருகுசீர் அராலிப் பாங்கர்
பிறங்கிடு கடல்க லக்கும் 93

276. கயலினம் நீந்திச் செல்லும்
கடும்புனல் நீந்தந் தன்னில்
வயலினில் உகளும் யாமை
வந்துவந் தேகி மீளும்
அயலினில் எருமைக் கூட்டம்
ஆடிடும் ஓடு நீரில்
வியலிடம் தனிலே மேவிக்
கொக்கொடு கரண்டம் தோன்றும் 94

[கலிநிலைத்துறை]

277. ஓங்கும் அயலின் எந்திர வோசை ஒழியாதே
தேங்கும் திரியுங் காளைகள் சும்மை தெருவெல்லாம்
வீங்கும் உழவர் புரிதரு மோதை விரிந்தேகும்
ஏங்குங் கடலில் எங்கணும் ஆர்ப்பும் எழுமாலோ 95

278. நீடு பரப்பை உழுதன ராங்கண் உரமிட்டார்
கூடு திறத்திற் செவ்விது செய்தார் குணமின்றி
வாடு மனத்தை நூல்பல கொண்டு வளமூட்டிப்
பீடு படுத்தும் நீர்மையை மானப் பெருமள்ளர் 96

279. நாளுங் கோளும் நன்கிதின் நோக்கி நவையின்றி
நீளுங் கழனி புக்கனர் நின்றார் நெல்வித்தி
மூளும் உவகை மைந்தரை ஓம்புந் தாயர்போல்
வாழும் உழவர் வருபயிர் பேணி மகிழ்கின்றார் 97

280, கூற்றம் அனைய கூர்விழி மாதர் குழாமாகி
நாற்றும் நடுவார் நல்லிசைப் பாடல் நவில்கிற்பார்
சேற்றுள் அலவன் சென்றளை ஏறும் செறிவாகிப்
பாற்றின் இனமும் சுற்றிடும் வானிற் பரந்தம்மா 98

281. ஆமை பெருகும் நீரில் ஓடும் அசையாமே
தாமே மள்ளர் சென்றிடு நீரைத் தகைவாரே
போமேஇறவு கெண்டை காரல் புதுநீரில்
மாமை மகளிர் முந்கிடு வார்கள் வரம்பெல்லாம் 99

282. கூறு சிறப்பின் தூயவர் உள்ளும் கொடியோர்கள்
மாறு விதத்தில் சென்றுறை கின்ற மாற்றம்போல்
ஏறு பயிருட் புல்வகை நின்றே இடர்செய்யும்
வேறு களைவார் வேலன கண்ணார் களைதாமே 100

283. நீரும் உயர நெல்லும் ஓங்கும் நிமிர்ந்தே
சேரும் உழவர் கள்களி கொள்வார் நகையாடிச்
சீரும் திருவும் சேர்தரச் செந்நெல் கருவெய்தும்
கூரும் கதிரும் போந்தினி தாகக் குலவுங்காண் 101

284, சான்றோர் எனவே சாய்தரு
சாலிக் கதிர்கண்டு
ஈன்றோர் எனவே மள்ளரும்
போந்தே இன்போடும்
வான்றோய் பயிரை ஈர்ந்தன
ராகிப் போர்வைப்பார்
நோன்றாட் சகட மீமிசை
நெல்லும் இல்லேகும் 102

[வேறு அறுசீர் விருத்தம்]

285. பொற்குவை என்கோ அன்றிப்
பொலிதரு பவழ மென்கோ
உற்றிடு தரளங் கொல்லோ
உயர்மணி இனங்கள் கொல்லோ

அற்புத நீர்மைத் தாகும்
அரியநெற் குவையை இல்லுட்
பொற்றைய தென்னும் பாங்மை
போற்றினர் குவித்து வைப்பார் 103

286. காளையர் தாமு மாங்கண்
கடும்புனல் நீத்தந் தன்னில்
வீழுதன் மாத ரோடு
விரைந்துநீர் ஆடச் செல்வார்
கேழுறு மரையின் மொட்டைக்
கிழத்தியர் தனமாமென்பார்
சூழுறு குவளை தன்னைத்
தோகையுர் விழியாய் காண்பார் 104

287. இளமடற் றெங்கின் நீரை
இரும்பனை நுங்கின் நீரை
வளமுறப் பருகி மீண்டும
வந்துநீர் ஆடுகிற்பார்
உளங்கவர் காத லாரை
உள்ளினர் மரையுள் மூழ்கி
தளர்வுறும் கன்னி மாரைத்
தாங்கியே இளைஞர் போவார் 105

288. தடமதில் ஆடிப் போந்து
தத்தம திருக்கை மீளும்
மடனுறு கன்னி மாரைக்
காளையர் மருவி யேகல்
சுடர்விழிப் பிணையினோடு
கலைசெலுந்தோற்ற மெங்கோ
அடல்செறி விடையினோடும்
நாகுசெல் அமைதி யெங்கோ 106

289. இல்லிடை எடுத்துவந்த இனிய
செந் நெல்லைக் குற்றி
மெல்லிடைச் சசியார் நாதன்
மிகுமகம் நூறு செய்தோன்
நல்லடி பரவிப் பொங்கி
நவில்தரு முன்றில் வைகி
எல்லவர் தமக்கு மூட்டி
இருங்கடன் களிப்பாரன்றே 107

290 மாதுளைக் கிளைகள் தோறும்
மரகதக் கனிகள் தொங்கும்
வாதிடு புலவோர்க் காக
வைத்திடு பரிசில் மானும்
ஓதிடும் கேள்வர் தாமும்
காதலிக் குரைக்கச் சொல்லும்
தூதினைக் கேட்பார் போலத்
தொடருமால் நாரை பாங்கர் 108

291. அருகுறை மேதி தானும்
அள்ளலை முன்னிச் சென்று
வருகரை உடைகுளத்தில்
வைகியே நிற்கு மாங்கண்
உருகுறு கன்றழைக்க
உள்ளமும் சோர்ந்து போகும்
பெருகுறு கயமீன் முட்டப்
பெயர்ந்திடும் குடிலை நோக்கி 109

292. மாமழை நின்ற பின்னே
மரநிழல் வண்டலாடும்
தேமரு குமுதச் செவ்வாய்ச்
சிறுமியர் செந்நிறத்துத்

தோமறு கோபந் தன்னைத்
தூக்கியே காரி யேக
நீமடுத் துண்ணு தென்றே
திகைத்துமே போவார் மீண்டு 110

293. வந்துறு தத்தைக் கூட்டம்
வளரிளந் தெங்கின் மேலே
நந்துபச் சோலை யுற்றே
நயந்தினி தாடுங் காட்சி
அந்தர மகளிர் தானோர்
அருங்கடி ஊஞ்சல் புக்கு
முந்தியே மொழிப யிற்றி
ஆடிடும் முறைமை ஒக்கும் 111

(வேறு தரவுக்கொச்சகம்)

294. வயலெல்லாஞ் செந்நெ லோடு
வளருங்காண் மலரினீட்டம்
புயலெல்லாம் இடித்துநின்று
பொழியுங்காண் அமுதநீரைக்
கயலெல்லாம் நீரினூடே
கலக்குங்காண் வாளை துள்ளும்
அயலெல்லாங் கன்னறயெண்ணி
அலறுங்காண் கறவை யீட்டம் 112

295. வானோங்கி வளர்ந்திடுநல்
மருதமர நீழலிலே
தானோங்கு நெற்போரைத்
தகவுடனே குவித்திருப்பார்
சேனோங்கு தீத்தெய்வம்
திரிதருமால் என்றஞ்சி
மானோங்கு வரிநெடுக்கண்
மடமகளிர் ஆங்கெய்தார் 113